பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

17 12 2024 12 40
செவ்வாய்க்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ‘ஒரே நாடு — ஒரே தேர்தல்’ மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக கட்சிக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் உறுப்பினர்கள் உரையாற்றி வருகின்றனர்.

2. நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பை மேம்படுத்துவதில் அரசு உறுதிகொண்டிருப்பதாக மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

3. ஆரோக்கியமான சமுதாயமே வளம் நிறைந்த நாடாக மலரும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

4. தென்மேற்கு வங்கக் கடலில் நிலவி வரும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி அதே இடத்தில் தொடர்ந்து நீடித்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஒரே நாடு – ஒரே தேர்தல் சட்டமசோதாவை இன்று அறிமுகம் செய்வது தொடர்பாக எதிர்க்கட்சிகள் எழுப்பிய அமளியை அடுத்து மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா, கட்சியின் சார்பாக ஒரு உறுப்பினர் தங்களது கருத்துகளை தெரிவிக்கலாம் என்று கூறினார்.

இதனையடுத்து, காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசிய திரு. மனீஷ் திவாரி, மத்திய அரசு இந்த மசோதாவை திரும்பப் பெற வேண்டும் என்றும், இது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும் கூறினார்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பேசிய திரு. கல்யாண் பானர்ஜி, இந்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று கூறினார்.

திமுக சார்பாக பேசிய திரு. டி.ஆர். பாலு, ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா மாநில சுயாட்சிக்கு எதிரானது என்று கூறினார்.

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சியினர் மசோதாக்களை நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் விவாதிக்காமல் அவையில் அறிமுகம் செய்வது நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று பதாகைகளை ஏந்தி எதிர்ப்பு தெரிவித்தனர்.

<<<<>>>>

தமிழ் கும்பமேளா என்று அழைக்கப்படும் கும்பகோணம் மஹாமகம் திருவிழா 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுவதாகவும், வட

இந்தியாவில் கும்பமேளாவுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவது போல பாரம்பரியம் மிக்க வகையில் இந்த திருவிழா கொண்டாடப்பட்டு வருவதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அவர் அளித்துள்ள பதிலில், இந்த விழாவை பிரபலப்படுத்துவதற்காக மத்திய மாநில அரசுகள் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும், தஞ்சாவூரில் செயல்படும் தென்மண்டல கலாச்சார மையத்திற்கு மத்திய அரசு நிதி வழங்கி வருவதாகவும் கூறினார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், ராமேஸ்வரம் ராமநாத சுவாமி திருக்கோவிலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் மத்திய ஆன்மிக சுற்றுலா தொகுப்பின்கீழ் சென்னை, மாமல்லபுரம், ராமேஸ்வரம், மணப்பாடு, கன்னியாகுமரி சுற்றுலா தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

73 கோடியே 13 லட்சம் ரூபாய் செலவில் ‘ஸ்வதேஷ் தர்ஷன்’ திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

<<<<>>>>

மாநில அரசுகள் மீதான கடன் சுமை குறித்து மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி நேற்று பதிலளித்தார்.

அரசுகள் மூலதன செலவினம் மற்றும் முதலீடுகளைப் பெறுவதற்கான வழிகள் எளிமையாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தமிழகத்திற்கு 31 சதவீத கடன் சுமை உள்ளதாக அவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டில் உள்ள 24 விமான நிலையங்களில் பயோமெட்ரிக் முறை மூலம் பயணம் மேற்கொள்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் திரு. முரளிதர் மொஹோல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்து மூலம் இதனைத் தெரிவித்த அவர், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை விமான நிலையங்களில் இது பயன்படுத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

'டிஜி யாத்ரா' செயலி மூலம் முக அடையாளத்தை பதிவு செய்து பயணிகள் எளிதாக அனுமதி பெற முடியும் என்று அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களின் கட்டமைப்பை மேம்படுத்துவதில் அரசு உறுதிகொண்டிருப்பதாக மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய அவர், ஒரு குழந்தையின் கல்விக்கான செலவாக அரசின் பங்களிப்பு கடந்த 8 ஆண்டுகளில் 130 சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறினார்.

பிரதமரின் சத்துணவு திட்டத்திற்காக மத்திய அரசு ஒரு லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் ஆராய்ச்சி மாணவர்கள் பயன்பெறும் வகையில் அடுத்த 3 ஆண்டுகளில் 'ஒரு நாடு – ஒரு சந்தா' திட்டத்திற்கு 6 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கி இருப்பதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

<<<<>>>>

கர்நாடகாவைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் துளசி கௌடா நேற்று காலமானார். அவருக்கு வயது 86.

அவரது மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சுற்றுச்சூழலைக் காப்பதற்காக துளசி கௌடா தன் வாழ்வையே அர்ப்பணித்தார் என்று புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அவர் ஆற்றியுள்ள பணிகள் வழிகாட்டுதலாக அமையும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

ஆரோக்கியமான சமுதாயமே வளம் நிறைந்த நாடாக மலரும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று 'ஃபிட் இந்தியா சைக்ளிங்' நிகழ்ச்சியை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

ஆரோக்கியத்துடன் வாழ்வது அவசியம் என்று கூறிய அமைச்சர், நாட்டு மக்கள் அனைவரும் நாள்தோறும் ஒரு மணி நேரமாவது சைக்ளிங் போன்ற உடற்பயிற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

காற்றின் தரக் குறியீட்டை மேம்படுத்தும் வகையிலும், ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் நோக்கிலும் நாடு முழுவதும்

பல்வேறு இடங்களில் செவ்வாய்க்கிழமைகளில் இந்த நிகழ்வு மேற்கொள்ளப்பட இருப்பதாக திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<>>>>

பூடான் நாட்டின் 117வது தேசிய தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், இரு நாடுகளுக்ககும் இடையேயான தனித்துவமான நட்புறவு மேலும் வலுப்பெறும் என்று கூறியுள்ளார்.

அந்நாட்டில் நடைபெறும் தேசிய தின கொண்டாட்டத்தில் அசாம் முதலமைச்சர் திரு. ஹிமந்தா பிஸ்வா சர்மா இன்று பங்கேற்கிறார்.

<<<<>>>>

நுண்கலை மற்றும் கலாச்சாரத்தில் சிறந்து விளங்குவோருக்கான மாணவர் சேர்க்கையை அடுத்த கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்த உள்ளதாக சென்னை ஐ.ஐ.டி. தெரிவித்துள்ளது.

பி.டெக். மற்றும் பி.எஸ். பாடத் திட்டங்களில் மற்றொரு பிரிவுக்கும் தலா 2 இடங்கள் வீதம் ஒதுக்கீடு செய்யப்படும் என்று சென்னை ஐ.ஐ.டி. கூறியுள்ளது.

<<<<>>>>

கேரளாவில் வயநாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு குரங்கம்மை நோய் அறிகுறிகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சமீபத்தில் வெளிநாடு சென்று திரும்பிய அவருக்கு கன்னூர் மருத்துவமனையில் சிறப்பு மருத்துவ குழு சிகிச்சை அளித்து வருகிறது.

இதற்கிடையே தலசேரியைச் சேர்ந்த இன்னொரு நபரும் இந்நோய் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகள் கூட்டமைப்பின் சர்வதேச வளர்ச்சிக்கான நிதியம் வளரும் நாடுகளுக்கு சுமார் ஒரு பில்லியன் டாலர் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

ஆஸ்திரியாவின் வியன்னாவில் நடைபெற்ற 190வது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் மூலமாக பங்களாதேஷ், இலங்கை, துருக்கி உள்ளிட்ட 22 நாடுகள் பலன்பெறும் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

வளரும் நாடுகளில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த இந்த நிதியுதவி உதவும் என்று இந்த அமைப்பின் தலைவர் திரு. அப்துல் ஹமீத் அல் கலீஃபா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ரஷ்யாவின் மாஸ்கோ நகரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் ரஷ்ய ராணுவத்தைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

அந்நாட்டின் அணு ஆயுத ரசாயன பாதுகாப்பு படையின் தலைவராக இருந்த லெஃப்டினெண்ட் ஜெனரல் இகோர் கிரிலோவ் இச்சம்பவத்தில் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தென்மேற்கு வங்கக் கடலில் நிலவி வரும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி அதே இடத்தில் தொடர்ந்து நீடித்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த இரு தினங்களில் மேற்கு – வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்று அவர் கூறினார்.

<<<<>>>>

சமையல் எரிவாயு மானியத்தை விட்டுத்தரும் இயக்கத்தில் இதுவரை ஒரு கோடியே 14 லட்சம் பேர் இணைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு மக்களவையில் எழுத்துப்பூர்வமாக பதிலளித்த அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. சுரேஷ் கோபி, கடந்த நிதியாண்டில் எழுநூற்று 75 கோடியே 98 லட்சம் ரூபாய் மானிய சேமிப்பாக அமைந்ததாக கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

புனேயில் இன்றிரவு 7 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் வரை 9 விக்கெட் இழப்புக்கு 222 ரன் எடுத்துள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 445 ரன் எடுத்தது.

-------------

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா – நேபாளம் இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

**<<<<The End>>>>**